இயல்

# 1

# எண்ணியல்

$a \times (b+c) = (a \times b) + (a \times c)$

## கற்றல் நோக்கங்கள்

- முழுக்களின் கூட்டல் மற்றும் கழித்தலைப் புரிந்துகொள்ளுதல்.
- முழுக்களின் பெருக்கல், வகுத்தல் ஆகியவற்றைப் புரிந்துகொள்ளுதல்.
- முழுக்கள் மீதான நான்கு அடிப்படை செயல்களின் பண்புகளைப் புரிந்துகொள்ளுதல்.
- முழுக்களின் மீதான நான்கு அடிப்படைச் செயல்பாடுகளைப் பயன்படுத்தி வாழ்வியல் பயன்பாட்டுக் கணக்குகளுக்குத் தீர்வு காணுதல்.

## மீள்பார்வை

இயல் எண்கள், பூச்சியம் மற்றும் குறை எண்களின் தொகுப்பு முழுக்களாகும்.

இதனை $\mathbb{Z}$ என்ற குறியீட்டால் குறிக்கிறோம்.

எண் கோட்டில் பூச்சியத்திற்கு இடப்புறமாகக் குறை முழுக்களையும் பூச்சியத்திற்கு வலப்புறமாக மிகை முழுக்களையும் குறிக்கிறோம்.




படம் *1.1*

எண்வரிசையில் ஒவ்வொரு முழுவும் இடமிருந்து வலமாக நகரும்போது ஏறுவரிசையில் இருக்கும்.

படத்தில் $A,B,C,D$ என்ற புள்ளிகள் குறிக்கும் முழுக்கள் பின்வருமாறு $A = +3,\ \ B = +7,\ D = -1$ மற்றும் $C = -5$.




படம் *1.2*

### இவற்றை முயல்க

1. கீழ்க்காணும் முழுக்களை ஏறுவரிசையில் எழுதுக:

   – 5, 0, 2, 4, – 6, 10, – 10

2. – 15, 12, – 17, 5, – 1, – 5, 6 ஆகிய எண்கள் எண்கோட்டில் குறிக்கப்பட்டால் இடது புறத்தில் குறிக்கப்பட்ட கடைசி எண் __________.

3. கீழ்க்காணும் தொடரைப் பூர்த்தி செய்க:

   ____, – 40, ____, ____, –10, 0, ____, 20, 30, ____, 50.

4. கீழ்க்காணும் எண்களை ஒப்பிட்டு "<", ">" அல்லது "=" குறியிடுக.

   (a) –65 ☐ 65  (b) 0 ☐ 1000  (c) –2018 ☐ –2018

5. கீழ்க்காணும் முழுக்களை இறங்கு வரிசையில் எழுதுக:

   –27, 19, 0, 12, – 4, –22, 47, 3, –9, –35



7th_Maths_T1_TM_Chp1.indd 1 12/12/2022 14:59:16